***இலங்கைச் சுற்றுலாவின் உயரிய அமைப்பான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துங்கள்***

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் தொடர்புடைய தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றிற்குப் பொறுப்பான அரசாங்க அதிகாரசபை ஆகும். சுற்றுலாத் துறை, எதிர்காலத்தில் தேசியப் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கியமான பங்களிப்பாளராக அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்துறை நாட்டிற்கு அதிகளவான நேரடி வெளிநாட்டு முதலீடுகளையும் உயர்மட்ட முதலீட்டாளர் திட்டங்களையும் ஈர்க்கின்றது.

அதிகாரசபையில் தற்போதுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | புதவி | வகை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் / சுற்றுலா திட்டமிடல் & அபிவிருத்தி | HM 1-1 | 01 |
| 02. | உதவிப் பணிப்பாளர்/ மென்பொருள் பொறியியலாளர் (Software Engineering) | MM 1-2 | 01 |
| 03. | இளநிலை முகாமையாளர்/ மனிதவள முகாமைத்துவம் | JM 1-2 | 01 |
| 04. | பல்பணி தொழில்நுட்பவியலாளர (Multi Duty Technician) | PL 3 | 03 |
| 05. | பம்ப் ஆபரேட்டர் (Pump Operator) | PL 2 | 02 |

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் :

- தேவையான தகைமைகள் உட்பட விரிவான வெற்றிட அறிவிப்பு SLTDA இணையதளத்தில் உள்ளது *Careers* – http://www.sltda.gov.lk/en/careers.
- விண்ணப்பதாரர்கள் அதே இணையப் பக்கத்தில் குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்ய வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் பதவியின் கடமைகளைத் திறமையாக மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகுதியைப் பெற்றிருக்க வேண்டியதுடன் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, கல்வி, தொழிற்துறை மற்றும் தொழில்சார் தகுதிகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள், அனுபவத்திற்கான ஆதாரத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விவரங்களுடன் 2026.07.03 அன்று அல்லது அதற்கு முன்னர், பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்:

  தலைவர்,
  இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
  இல. 80, காலி வீதி, கொழும்பு 03

  விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

- தற்போது, அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச் சட்ட சபைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை குறித்த திணைக்களத் தலைவர்கள் ஊடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறைந்தபட்சத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களைச் சுருக்கிப்பட்டியலிடுவதற்கு முகாமைத்துவத்திற்கு உரிமை உண்டு. எந்த முறையிலும் சிபாரிசு பெறுவது ஒரு தகுதியிழப்பாகக் கருதப்படும்.

**ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பு**

தெரிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 10% பங்களித்தல் வேண்டும். அதேவேளை அதிகாரசபை, 15% பங்களிப்பைச் செய்வதுடன் இதற்கு மேலதிகமாக, ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% செலுத்தப்படும்.

**சம்பளம்**

இப்பதவிக்குரிய சம்பளம், 2025.04.01 ஆம் திகதியிலிருந்து அமுலான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருப இல. 01/2025 இன் படி வழங்கப்படும்.

ஆட்சேர்ப்பு தொடர்பான அதிகாரசபையின் தீர்மானம் இறுதியானது.

**தலைவர்,**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,**
**80, காலி வீதி,**
**கொழும்பு 03.**

**வெளியிடப்பட்ட திகதி: 2026.06.19**

**இலங்கைச் சுற்றுலாவின் உயரிய அமைப்பான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துங்கள்**

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் தொடர்புடைய தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றிற்குப் பொறுப்பான அரசாங்க அதிகாரசபை ஆகும். சுற்றுலாத் துறை, எதிர்காலத்தில் தேசியப் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கியமான பங்களிப்பாளராக அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்துறை நாட்டிற்கு அதிகளவான நேரடி வெளிநாட்டு முதலீடுகளையும் உயர்மட்ட முதலீட்டாளர் திட்டங்களையும் ஈர்க்கின்றது.

அதிகாரசபையில் தற்போதுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | புதவி | வகை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் / சுற்றுலா திட்டமிடல் & அபிவிருத்தி | HM 1-1 | 01 |
| 02. | உதவிப் பணிப்பாளர்/ மென்பொருள் பொறியியலாளர் (Software Engineering) | MM 1-2 | 01 |
| 03. | இளநிலை முகாமையாளர்/ மனிதவள முகாமைத்துவம் | JM 1-2 | 01 |
| 04. | பல்பணி தொழில்நுட்பவியலாளர (Multi Duty Technician) | PL 3 | 03 |
| 05. | பம்ப் ஆபரேட்டர் (Pump Operator) | PL 2 | 02 |

**1. பணிப்பாளர் / சுற்றுலா திட்டமிடல் & அபிவிருத்தி (01 வெற்றிடம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

**அ** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா முகாமைத்துவம்/ சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்/ சுற்றுலாத் திட்டமிடல்/ சுற்றுலா அபிவிருத்தி/ வணிக முகாமைத்துவம்/ வணிக நிர்வாகம்/ பொருளாதாரம்/ பொறியியல் ஆகிய பாடப்பரப்புகளில் ஒன்றில் இளங்கலைப் பட்டம் (Bachelor's Degree).

**அத்துடன்**
தொடர்புடைய பாடப்பரப்பில் முதுகலைப் பட்டம் (Master's Degree) அல்லது பதவிக்கு பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பின் இணை உறுப்பினர் தகைமை (Associate Membership).

**மற்றும்**
அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் ''நிர்வாக மட்ட'' பதவியில் தொடர்புடைய துறையில் 15 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ பதவிக்கு பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பின் முழுமையான உறுப்பினர் தகைமை (Full Membership).

**மற்றும்**

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், விதிகளமைக்கப்பட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் ”நிர்வாக மட்ட” (Management Level) பதவியில் தொடர்புடைய துறையில் 15 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (கீழே உள்ள 1 அல்லது 2):**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. முகாமைத்துவ சேவைகள் (MM 1-2) சேவை வகையின் தரம் I இல் தொடர்புடைய பாடப்பரப்பில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**

35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத்திட்டம்**

(HM 1-1 2025):

ரூபா 140,640/- 15 x ரூ. 4,100/- ரூபா 202,140/- + வாழ்க்கைச் செலவுப் படி.

**சலுகைகள்:**

- ஊழியர் மற்றும் குடும்பத்தை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படி.
- தொலைபேசிப் படி.
- தொழில்துறைப் படி (Professional Allowance).
- கடன் வசதிகள்.

2. **உதவிப் பணிப்பாளர்/ மென்பொருள் பொறியியல் (Software Engineering) (01 வெற்றிடம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

அ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் / கணினி அறிவியல் / மென்பொருள் வடிவமைப்பு / மென்பொருள் பொறியியல் ஆகிய பாடப்பரப்புகளில் ஒன்றில் இளங்கலைப் பட்டம்.

**அல்லது**

ஆ மூன்றாம் நிலை மற்றும் தொழற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, மேற்கூறிய பாடப்பரப்புகளுடன் தொடர்புடைய தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 7 இற்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழ்.

**மற்றும்**

பதவிக்கு பொருத்தமான துறையில் தகைமை பெற்றதற்குப் பின்னரான குறைந்தபட்சம் 01 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (கீழே உள்ள 1 அல்லது 2):**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. இளநிலை முகாமையாளர் (JM 1-2) தரம் II சேவை வகையில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது**

22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத்திட்டம்**

(MM 1-2 2025):
ரூபா 94,170/- 10x ரூபா 2,480/- 15 x ரூபா 3,450/- ரூபா 170,720/- + வாழ்க்கைச் செலவுப் படி.

**சலுகைகள்:**

- ஊழியர் மற்றும் குடும்பத்தை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- தொழில்முறை மேம்பாட்டிற்கான பயிற்சிகள்.
- போக்குவரத்துப் படி.
- தொலைபேசிப் படி.
- தொழில்துறைப் படி.
- கடன் வசதிகள்.

**3. இளநிலை முகாமையாளர்.'. மனிதவள முகாமைத்துவம் (01 வெற்றிடம்)**

**தகைமைகள்:**
**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கானவை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ வணிக முகாமைத்துவம்/ வணிக நிர்வாகம் ஆகிய பாடப்பரப்புகளில் ஒன்றில் இளங்கலைப் பட்டம்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (கீழே உள்ள 1 அல்லது 2):**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்பமற்ற சேவை வகையின் மேலாண்மை உதவியாளர் (MA 1-2) தரம் II இல் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது:**

22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத்திட்டம்**

(JM 1-2 2025):
ரூபா. 74,010/- 10 x ரூ. 1,360/- 18 x ரூபா 2,040/- ரூ. 124,330/- + வாழ்க்கைச் செலவுப் படி.

**சலுகைகள்:**

- ஊழியர் மற்றும் குடும்பத்தை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- தொழில்முறை மேம்பாட்டிற்கான பயிற்சிகள்.
- போக்குவரத்துப் படி.
- தகவல் தொடர்புப் படி
- கடன் வசதிகள்.

**4. பல்பணி தொழில்நுட்பவியலாளர் (Multi Duty Technician) (03 வெற்றிடங்கள்)**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

**திறன்கள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, அந்தந்த பதவிக்குரிய வேலைகளுக்குத் தொடர்புடைய மோட்டார் வாகன/ மின்சார/ நீர் விநியோக தொழில்நுட்பம்/ குளிரூட்டி/ மேசன்/ தச்சுவேலை ஆகியவற்றில் தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 4 இற்குக் குறையாத திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் அந்தந்த பதவிக்குரிய வேலைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 4 இற்குக் குறையாத பரீட்சையில் (தொழில்முறை சோதனை) சித்தியடைந்திருப்பதுடன் தொடர்புடைய துறையில் ஐந்து (5) வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் அந்தந்த பதவிக்குரிய வேலைகளுக்குத் தொடர்புடைய தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 4 இற்குக் குறையாத திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:**

18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத்திட்டம்**

(PL 3 2025):
ரூபா 43,280/- 10 x ரூபா 490/- 10 x ரூபா 540/- 10 x ரூபா .590/- 12 x ரூபா 630/- ரூபா 67,040/- + வாழ்க்கைச் செலவுப் படி.

**சலுகைகள்:**

- ஊழியர் மற்றும் குடும்பத்தை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- தொழில்முறை மேம்பாட்டிற்கான பயிற்சிகள்.
- போக்குவரத்துப் படி.
- கடன் வசதிகள்.

## 5. பம்ப் ஆபரேட்டர் (Pump Operator) (02 பதவியிடங்கள்)

**தகைமைகள்**
**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட, குறித்த பதவிக்குரிய மோட்டார்/நீர் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளுடன் தொடர்புடைய, தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் இரண்டிற்கு (2) குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றினால், குறித்த பதவிக்குரிய பணிகளுக்குப் பொருத்தமாக நடாத்தப்படும் பரீட்சை (தொழில்முறை சோதனை/Trade Test) மூலம் உறுதிப்படுத்தப்பட்ட, தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் இரண்டிற்கு (2) குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருப்பதுடன், தொடர்புடைய துறையில் ஐந்து (5) வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றினால், குறித்த பதவிக்குரிய பணிகளுக்குப் பொருத்தமாக வழங்கப்பட்ட, தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் இரண்டிற்கு (2) குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது**

18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத்திட்டம்**

PL-2 2025
ரூபா 42,300/- 10 x ரூபா 490/- 10 x Rs. 540/- 10 x Rs. 590/- 12 x Rs. 630/- ரூபா 66,060/-

**சலுகைகள்:**

- ஊழியர் மற்றும் குடும்பத்தை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- தொழில்முறை மேம்பாட்டிற்கான பயிற்சிகள்.
- போக்குவரத்துப் படி.
- கடன் வசதிகள்.

**தலைவர்,**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,**
**80, காலி வீதி,**
**கொழும்பு 03.**

**பிரசுரிக்கப்பட்ட திகதி: 2026.06.19**